# பிரதமர் அவர்களின் சைப்ரஸ் குடியரசு, கனடா மற்றும் குரோஷியா பயணம் (15-19th ஜூன், 2025)

ஜூன் 14, 2025

சைப்ரஸ் குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. நிக்கோஸ் கிறிஸ்டோடோலைட்ஸ் அழைப்பில் பேரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 15-16 ஜூன், 2025 தேதிகளில் சைப்ரஸ் குடியரசுக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்வார். இது இரண்டு தசாப்தங்களுக்கு பிறகு சைப்ரஸிற்கு இந்திய பிரதமரின் முதல் வருகையாக இருக்கும்.  நிக்கோசியாவில், பிரதமர் அவர்கள் ஜனாதிபதி கிறிஸ்டோடோலைட்ஸ் உடன் பேச்சுவார்த்தை நடத்தி லிமசோலில் வணிகத் தலைவர்கள் உடன் உரையாற்றுவார்.  இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்தவும், மெடிட்டரினியன் பிராந்தியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியாவின் ஈடுபாட்டை வலுப்படுத்தவும் இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இந்த வருகை மீண்டும் உறுதி செய்யும்.

2. கனடாவின் பிரதமர் திரு. மார்க் கார்னி அவர்களின் அழைப்பில் பேரில், அவரது வருகையின் இரண்டாவது கட்டத்தில், G-7 உச்சிமாநாட்டில் பங்கேற்க பிரதமர் ஜூன் 16-17 தேதிகளில் கனனாஸ்கிஸ்-க்கு பயணம் செய்வார்.  இது G-7 உச்சிமாநாட்டில் பிரதமரின் தொடர்ச்சியான 6 வது பங்கேற்பாக இருக்கும்.  உச்சிமாநாட்டில், பிரதமர் G-7 நாடுகளின் தலைவர்கள், பிற அழைக்கப்பட்ட அவுட்ரீச் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களுடன் எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு, குறிப்பாக AI-எனர்ஜி நெக்சஸ் மற்றும் குவாண்டம் தொடர்பான பிரச்சனைகள் உட்பட முக்கியமான உலகளாவிய பிரச்சனைகள் குறித்து கருத்துக்களை எடுத்துரைப்பார்.  உச்சிமாநாட்டில் பல இருதரப்பு கூட்டங்களையும் பிரதமர் நடத்துவார்.

3. அவரது சுற்றுப்பயணத்தின் இறுதி கட்டத்தில், குரோஷியா குடியரசின் மாண்புமிகு பிரதமர் திரு. ஆண்ட்ரேஜ் பிளெங்கோவிச் அவர்களின் அழைப்பில் பேரில், பிரதமர் அவர்கள் 18 ஜூன் 2025 அன்று குரோஷியாவிற்கு அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொள்வார். இது குரோஷியாவிற்கு இந்திய பிரதமரின் முதல் வருகையாகும், இது இருதரப்பு உறவில் ஒரு முக்கியமான மைல்கல்லை குறிக்கிறது. நமது பிரதமர் அவர்கள் அந்நாட்டு பிரதமர் பிளெங்கோவிச் உடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார் மற்றும் குரோஷியா ஜனாதிபதி ஜோரான் மிலனோவிச் அவர்களை சந்திப்பார். ஐரோப்பிய ஒன்றியத்தில் பங்குதாரர்களுடன் அதன் ஈடுபாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த குரோஷியா பயணம் எடுத்துக் காட்டும்.

புது தில்லி

ஜூன் 14, 2025